**மூன்றாவது கூடுதல் மாவட்ட நீதிமன்றம், கோபிசெட்டிபாளையம்**

2026 ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் 09- ம் நாள் திரு.S.இராமச்சந்திரன், B.L., மூன்றாவது கூடுதல் மாவட்ட நீதிபதி அவர்களின் முன்னிலையில் உரிமையியல் நடைமுறைச் சட்டம் மற்றும் விதிகளின் படி உறுதிசெய்யப்படுகிறது.

**O.S. NO. 61/2019**

**பி.வா.சா.1**

**திருமதி. லதா**

**சாட்சி மீண்டும் அழைக்கப்பட்டு குறுக்கு விசாரணை செய்யப்படுகிறார்.**

**குறுக்கு விசாரணை ( வாதி தரப்பில்)**

என் மாமனார் ராமதுரைக்கு சோமசேகர், சுசித்ரா என்ற இரண்டு வாரிசுகள் என்றால் சரிதான். என் மாமனார் 2000 ம் ஆண்டு காலமாகிவிட்டார் என்றால் சரிதான். அவர் காலமாகும்வரை தாவா சொத்துக்களை பிரிக்கவில்லை என்றால் ஆமாம். என் மாமியார் வேதவதியின் பெற்றோர் ஊரானது சக்கலேஸ்புரா என்றால் சரிதான். என் மாமியாருக்கு தமிழ் எழுத படிக்க தெரியாது என்றால் ஆமாம் ஆனால் பேசுவார். என் கணவர் சுப்புராம்மஹால் என்ற திருமண மண்டபத்தை 2001ம் ஆண்டு கட்ட ஆரம்பித்தார் என்றால் சரிதான். மேற்படி மண்டபம் எந்த ஆண்டு கட்டி முடிக்கப்பட்டது என்றால் தெரியாது. 2001ம் ஆண்டு ஆரம்பித்து 2003ம் ஆண்டு கட்டி முடிக்கப்பட்டது என்றால் தெரியாது. எனக்கும், என் கணவருக்கும் எந்த ஆண்டு திருமணம் நடந்தது என்றால் 1986 என்று நினைக்கிறேன் சரியாக தெரியவில்லை. சுப்புராம்மகால் கல்யாண மண்டபத்தை என் கணவரும், சுசித்ராவும் பிரித்துக்கொள்ளவில்லை என்றால் தெரியாது. வா.சா.ஆ.1 பத்திரம் தயாரித்த பத்திர

எழுத்தரை என் கணவர் தான் ஏற்பாடு செய்தார் என்றால் ஆமாம் ஆனால் எனக்கு அது பற்றி தெரியாது. மேற்படி ஆவணத்தை பதிவு செய்த சமயத்தில் நான் அங்கு இருக்கவில்லை என்றால் சரிதான். நான் பத்திர பதிவு அலுவலகத்திற்கு செல்லவில்லை என்பதால் வா.சா.ஆ.1 ஆவணம் எந்தவிதத்தில் தயாரிக்கப்பட்டது என்று எனக்கு தெரியாது என்றால் சரிதான். என் மாமியார் என் கணவரின் பராமரிப்பில் தான் இருந்து வந்தார் என்றால் சரிதான் ஒரே குடும்பமாக இருந்தோம். வா.சா.ஆ.1 ஆவணத்தின்படி வாதி சுசித்ராவுக்கு எந்த சொத்தும் கொடுக்கவில்லை என்றால் எனக்கு தெரியாது ஆனால் ஈரோடு மாவட்ட ஆட்சியர் அலுவலகத்திற்கு அருகேயுள்ள சொத்து கொடுக்கப்பட்டது. இந்த வழக்கு தாக்கல்செய்த பின்னிட்டு நான் வா.சா.ஆ.1 ஆவணத்தை பற்றி தெரிந்துகொண்டேனா என்றால் ஆமாம். வாதிக்கு எந்த வகையில் ரூ.1 லட்சம் கொடுக்கப்பட்டது என்று தெரிந்துகொண்டேனா என்றால் இல்லை. என் கணவர் உயிருடன் இருக்கும்வரை வாதிக்கு எந்தமுறையில் அதாவது வங்கி மூலமாக அல்லது ரொக்கமாக பணம் கொடுக்கப்பட்டதா என்று கேட்டு தெரிந்துகொண்டேனா என்றால் இல்லை. சுப்புராம் மகால் கட்டுவதற்கு என் கணவர் எவ்வளவு தொகை கையில் வைத்திருந்தார் என்றால் எனக்கு தெரியாது. மேற்படி கட்டுமானத்திற்கு என்னுடைய நகைகள் பயன்படுத்தப்பட்டதா என்றால் இல்லை. உண்மையில் என் கணவர் மேற்படி திருமண மண்டபத்தை கட்டுவதற்கு கடன் பெற்றார் என்றால் தெரியாது. எனக்கும் என் கணவருக்கும் எந்தவிதமான கருத்துவேறுபாடும் இல்லை நாங்கள் இருவரும் குடியிருந்தோம் என்றால் சரிதான். என் கணவர் மேற்படி திருமண மண்டபத்தை கட்டுவதற்காக தொகைகளை எவ்வாறு திரட்டினார்,

எவ்வாறு செலவு செய்தார் என்று என்னுடன் பகிர்ந்துகொண்டார் என்றும், இந்த வழக்கிற்காக நான் அதை மறைத்து சாட்சியமளிக்கிறேன் என்றால் சரியல்ல என்னுடன் பகிர்ந்துகொள்ளமாட்டார் ஆண்கள் விவகாரத்தில் ஏன் தலையிடுகிறாய் என்று கேட்பார். சுப்புராம் மகால் கட்டுமான சமயத்தில் தான் அவருக்கு இருதய அறுவை சிகிச்சை மேற்கொள்ளப்பட்டது என்றால் இல்லை மண்டபம் கட்டி முடிக்கப்பட்டது. 2004 ம் வருடத்தில் அறுவை சிகிச்சை மேற்கொள்ளப்பட்டதா என்றால் இருக்கலாம். மேற்படிஅறுவை சிகிச்சைக்கு எவ்வளவு செலவானது என்றால் எனக்கு தெரியாது ஆனால் மருத்துவமனையில் தொகையை குறைத்து கொடுக்ககேட்டேன் 2 லட்ச ரூபாய் குறைத்துகொடுத்தார்கள். என் கணவர் மேற்படி கட்டுமானத்திற்கும், அவரது அறுவை சிகிச்சைக்கும் கடன்பெற்றிருந்தார் என்றால் தெரியாது. மேற்படி திருமண மண்டபம் கட்டுமானத்திற்காகவும், தனது அறுவை சிகிச்சைக்காகவும் பெற்ற கடனை திருப்பி செலுத்துவதற்காக வங்கியில் கடன் பெறவேண்டும் என்ற நோக்கத்தில் வாதியை அழைத்து 26-12-2006 தேதியில் ஆவணத்தில் கையெழுத்தை பெற்றுக்கொண்டார் என்றால் சரியல்ல. எனக்கு மேற்படி விபரங்கள் அனைத்தும் நன்றாக தெரியும் என்றும், இந்த வழக்கிற்காக பொய் சொல்கிறேன் என்றால் சரியல்ல. பத்திர பதிவு சமயத்தில் என் மாமியாரின் தங்கை நளினியும் பத்திர பதிவு அலுவலகத்திற்கு வந்திருந்தார் என்றால் சரிதான். அவருக்கும் தமிழ் எழுத படிக்க தெரியாது என்றால் சரிதான். வாதி தனது தகப்பனாருக்கு பாத்தியப்பட்ட சொத்தில் பாகம் கேட்டு வழக்கு தாக்கல் செய்துள்ளார் என்றால் சரிதான். வாதி எந்தெந்த பூமிகளை பொறுத்து வழக்கு தாக்கல் செய்துள்ளார் என்று என் வழக்கறிஞரை கேட்டு தெரிந்துகொண்டேனா என்றால்

ஆமாம். 26-12-2006 தேதியிட்ட ஆவணத்தில் என் மாமியாருக்கு என்ன சொத்து ஒதுக்கப்பட்டது என்று தெரியுமா என்றால் தெரியாது. மேற்படி ஆவணத்தில் வேதவதி இறந்தபின்னிட்டு அவருக்கு ஒதுக்கிய சொத்துக்கள் என் கணவர் சோமசேகருக்கு செல்லவேண்டும் என்று வாசகம் உள்ளதா என்றால் என் மாமியார் சொன்னதன்பேரில் அவ்வாறு எழுதப்பட்டது. மேற்படி வாசகங்கள் சட்டப்படியான வாசகங்கள் அல்ல என்றால் சரியல்ல. என் கணவர் வாதிக்கு சொத்து கொடுக்கக்கூடாது என்றும், அவரது சொத்தை அபகரிக்கவேண்டும் என்பதற்காகத் தான் தனது தாயாருக்கு ஒதுக்கப்பட்ட சொத்தை கூட அவரது மறைவுக்கு பின்னிட்டு தனக்கு சென்றடையவேண்டும் என்ற நோக்கத்தில் ஒரு வாசகத்தை 26-12-2006 ஆவணத்தில் எழுதியுள்ளார் என்றால் சரியல்ல. என் கணவர் உயிருடன் இருந்த காலம் வரை என்ன வகையில் வருமான வரி செலுத்தி வந்தார் என்று தெரியுமா என்றால் தெரியாது. என் கணவரின் இறப்புக்கு பின்னிட்டு நான் எவ்வாறு வருமான வரி செலுத்திவருகிறேன் என்றால் ஆடிட்டர் புஷ்பராஜ் மூலமாக செலுத்திவருகிறேன். என் கணவரின் வருமான வரி கணக்கையும், எனது வருமான வரி கணக்கையும் நீதிமன்றத்தில் தாக்கல் செய்ய தயாராக உள்ளேனா என்றால் எனது கணக்கை நான் தாக்கல் செய்ய தயாராக உள்ளேன் என் கணவரது வருமான வரி கணக்கு பற்றி எனக்கு தெரியாது. திருமண சமயத்தில் என் பெற்றோர்கள் எனக்கு எவ்வளவு நகைகள் போட்டார்கள் என்றால் 20 பவுன் போட்டார்கள். மேற்படி நகையை என் கணவருக்கு வேறு உபயோகத்திற்கு கொடுக்கவில்லை என்றால் கொடுத்திருந்தேன். எந்தெந்த தருணத்தில் அவ்வாறு கொடுத்ததாக சொல்கிறேன் என்றால் குறிப்பாக சொல்ல தெரியாது அவ்வப்போது

வந்து கேட்பார் கொடுத்துள்ளேன். உண்மையிலேயே நான் கொடுத்திருந்தால் அதை நினைவில் வைத்து தற்போது பதிலளித்திருப்பேன் என்றால் சரியல்ல. மல்லேசகவுடர் மகன் மகேஷ் ஓட்டுநராக இருந்து வருகிறார் என்றால் சரிதான். எங்களிடத்தில் எவ்வளவு நாட்களாக ஓட்டுநராக இருந்து வந்தார் என்றால் சிறுவயதிலிருந்தே இருந்த வந்தார். தற்போதுவரை அவர் தான் எங்களிடம் ஓட்டுநராக உள்ளார் என்றால் சரிதான். 26-12-2006 ஆவணத்தில் அவரும் ஒரு சாட்சி என்றால் சரிதான். எனது கணவர் அவரது தகப்பனார் இறந்தபின்னிட்டு எவ்வாறு பூமிகளை பராமரித்து வந்தாரோ அதே மாதிரி தான் தற்போதும் நான் பராமரித்து வருகிறேன் என்றால் சரிதான்.

**வேண்டுகோளின்படி குறுக்கு விசாரணை தொடர்ச்சிக்காக ஒத்திவைக்கப்படுகிறது.**